## பூநகரிப் பிரதேச சபை

## கிளிநொச்சி மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 18 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 யூலை 18 ஆம் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பூநகரிப் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | பாதீடு செய்யப்பட்ட ரூபா 850,000 பெறுமதியான 02 மூலதன வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படாது மூலதனச் செலவினமாக கணக்குகளில் கூட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் சில்லறைக் கடனாளிகள் கணக்கிலும் கூட்டிக் காட்டப்பட்டுள்ளது. | மின்தூக்கி அமைத்தல் வேலைத்திட்டத்திற்கு சபையின் வருமான இயலாததன்மை காணப்படுவதுடன் வீதி புனரமைத்தல் வேலையை முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வினைத்திறனான முறையில் பாதீட்டினை தயாரித்து வேலைத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் |
| (ii) | ஒப்பந்ததாரருக்கான பிடிபணம் ரூபா 83,241 முற்பணக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளமையால் முற்பணக் கணக்கு கூட்டிக் காட்டப்பட்டுள்ளது. | இத்தவறு சீர்செய்யப்பட்டுள்ளது. | கணக்குகள் சரியான முறையில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (iii) | 2018 ஆம் ஆண்டின் நெற்புலவு வீதி வேலைத்திட்டம் மூலதனச் செலவினமாக காட்டப்பட்டு | வேலை தற்போது முடிவுறுத்தப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஒப்பந்தத்தின் பிரகாரம் உரிய வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மூலதன வேலை மேற்கொள்ளப்படாது சில்லறைக் கடன் கொடுத்தோர் கணக்குகளின் ரூபா. 300,000 காட்டப்பட்டிருப்பதனால் சில்லறைக் கடன் கொடுத்தோர் கணக்கு மீதி கூட்டிக் கணக்கிடப்பட்டுள்ளது. | | |
| (iv) | பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா. 210,000 பெறுமானத்தேய்வு ஒதுக்கக்கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்காது திரண்டநிதிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருப்பதனால் திரண்டநிதிக்கணக்கு கூட்டிக் கணக்கிடப்பட்டுள்ளது. | இனிவரும் ஆண்டில் பெறுமானத்தேய்வு ஓதுக்கம் மூலதன ஒதுக்கமாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | மூலதன ஒதுக்கங்கள் கணக்குகளில் காட்டப்படல் வேண்டும் |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு இறுதியில் ஆயுர்வேத வைத்தியசாலை பௌதீக மருந்து இருப்புக்களின் கூட்டுமொத்தம் ரூபா 317,061 ஆகக் காணப்படுகின்ற போதிலும் நிதிக்கூற்றில் ஆயுர்வேத வைத்தியசாலை மருந்து இருப்பாக ரூபா. 282,430 காட்டப்பட்டிருப்பதனால் ரூபா 34,631 பெறுமதியான ஆயுர்வேத வைத்தியசாலை மருந்து இருப்பு நிதிக்கூற்றில் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | இத்தவறு கவனத்தில் எடுக்கப்பட்டு சீர்செய்யப்படும். | கணக்குகள் இணக்கம் செய்யப்படல் வேண்டும் |
| (ii) | 31 திசெம்பர் 2019 இல் காகிதாதி இருப்பு பதிவேட்டில் மீதியாக ரூபா 143,853 ஆகக் காணப்படுகின்ற போதிலும் | இத்தவறு கவனத்தில் எடுக்கப்பட்டு சீர்செய்யப்படும். | கணக்குகள் இணக்கம் செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றில் காகிதாதி இருப்பு கணக்குகளில் ரூபா 33,401 காட்டப்பட்டிருப்பதனால் ரூபா 110,452 பெறுமதியான இருப்புக்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. | | |
| (iii) | மூலதன பயன்பாட்டிற்கான வருமான உதவுதொகைகள் கணக்கு மீதி ரூபா 140,627,654 ஆகவும் சபையின் நிலையான சொத்துக்கள் கூட்டுமொத்தம் ரூபா 139,164,596 ஆகவும் காணப்படுவதனால் ரூபா 1,463,058 பெறுமதி வேறுபாடாக காணப்படுகின்றது. | பதில் வழங்கப்படவில்லை | கணக்குகள் இணக்கம் செய்யப்பட வேண்டும் |

**(இ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுகளில் நிலையான சொத்துக்களாக காட்டப்பட்டுள்ள ரூபா 1,463,914 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் மின் இணைப்பு பொருட்களுக்கு நிலையான சொத்துப்பதிவேடு மற்றும் உபகரண கணிப்பீட்டுச்சபை அறிக்கைகள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமையினால் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதியை கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்த முடியாதுள்ளது. | நிலையான சொத்துப்பதிவேடு மற்றும் உபகரணப் பதிவேடு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய பதிவேடுகள் பேணப்படல் வேண்டும் |

## 1.4 இணக்கமின்மைகள்

| | அவதானிப்புக்கள்<br>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 868,715 | இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட 28 காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | 02 வைப்புக்கள் மீளளிக்கப்பட்டுள்ளது .ஏனையவை மீளளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 371 இன் திருத்திய சுற்றறிக்கை 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 இன் 371(2)ஆ | 128,320 | பதவிநிலை உத்தியோகத்தரின் பெயரில் உபகட்டுநிதியானது வழங்கப்படாது தனியார் நிறுவனப் பெயரிற்கு முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. | தற்போது சீர்செய்யப்பட்டுள்ளது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (இ) | 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 151 பிரிவு | - | வியாபார நோக்கத்திற்காக இருப்பாட்சி செய்யப்படும் ஆதனங்களுக்கு இடப்பரப்பின் ஒதுக்கீட்டின் ஆண்டுப் பெறுமதியில் தீர்வை வரி தீர்மானிக்கப்பட்டிருக்காது 07 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வருடாந்த வியாபார உரிமக்கட்டணம் அறவீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | காலங்கடந்த நிகழ்வாகையால் அறவீடு செய்வதில் சிரமங்கள் உள்ளன | சட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ஈ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசு வடமாகாண சபை மாகாண நிதிவிதி – 2008 இல் 163.3(ii) | 449,704 | 05 முற்பணக் கொடுப்பனவுகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | முற்பணக் கொடுப்பனவுகள் அனைத்தும் தீர்வு செய்யப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (உ) | இலங்கை சனநாயக சோசலிசக் | | பிரதான பேரேடொன்று அரசிறை, செலவீனம், முற்பணங்கள், வைப்புக்கள், | பிரதான பேரேடு தயாரிக்க நடவடிக்கை | பிரதான பேரேடு தயாரிக்கப்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| குடியரசின் வர்த்தமானப்பத்திரிகை 1989 ஏப்ரல் 17 திகதிய அத்தியாயம் VII பிரிவு 16 இல் 165 இன் படி | | கடன்கள், நிலையான வைப்புக்கள் மற்றும் தொடர்புடைய கணக்குகளை குறித்து தயாரிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் சபையால் பிரதான பேரேடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | எடுக்கப்பட்டுள்ளது. | ல் வேண்டும் |
| (ஊ) ஏனைய சுற்றறிக்கைகள் | | | | |
| (i) உள்ளுராட்சி ஆணையாளர், வடமாகாணம் அவர்களின் 2016 மே 25 திகதிய 04/2016 சுற்றறிக்கை | 9,771,416 | அரசிறை அறவீடு, நிலுவை அறவீடு பற்றிய மாதாந்தக் கூற்று – பி.ச 07 கணக்கறிக்கை மாதாந்தம் தயாரிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதும் சபையினால் பி.ச-07 தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | இனி வரும் காலங்களில் இவ்வாறான தவறுகள் ஏற்படாது இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |
| (ii) 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் பிரிவு 32(1) | - | சபையின் எல்லைக்குள் நெற்பரப்பு காணிகளில் 42 வீடுகள் அமைக்கப்பட்டிருந்தும் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கை எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டத்தின் பிரகாரம் செயற்படல் வேண்டும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,539,575 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,621,348 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலங்கள் | | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்றின் படியான நிலுவைகள் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 369,000 | 539,785 | - | 212,550 | 197,570 | 3,850 |
| (ii) | வாடகைகள் | 3,882,255 | 3,816,574 | 1,383,562 | 2,531,460 | 2,591,008 | 951,617 |
| (iii) | அனுமதிப் பத்திரக்கட்டணங்கள் | 319,400 | 922,622 | 5,000 | 409,120 | 701,286 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 6,311,370 | 34,809,529 | 8,340,780 | 7,075,140 | 8,988,534 | 7,087,696 |
| | | 10,882,025 | 40,088,510 | 9,729,342 | 10,228,270 | 12,478,398 | 8,043,163 |

## 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையானது தனது வருமானத்தினை பட்டியல்படுத்தி சேகரிப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக எடுக்கப்பட்டிருக்கவில்லை | அண்மித்த வருமானங்களை பாதீட்டு மதிப்பீட்டில் பட்டியல்படுத்தி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பட்டியல்படுத்தி வருமானங்களை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 1,383,564 ஆன வாடகைகள் மற்றும் குத்தகைகள் 01 தொடக்கம் 08 ஆண்டுகளாக நிலுவைகள் அறவீடு செய்யப்படாதிருக்கின்ற போதும் நிலுவை வாடகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு இணக்க சபையின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. | வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |
| (இ) | உறுப்பினர்படி ரூபா 42,074 கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதுடன் இதனை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிலுவைகளை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 139 ஆவது பிரிவின் பிரகாரம் வீதவரிக்கான விலைமதிப்பீட்டு விபரத்திரட்டு சபையினால் மேற்கொள்ளப் பட்டிருக்காமையினால் கட்டடம், வீடு, காணி என்பன வரிமதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் பெறுமதியான அடிப்படையில் வீதவரிகள் அறவிடும் நடைமுறை காணப்பட்டிருக்காததுடன் வருடாந்தம் வீதவரி அறவீட்டின் மூலம் வீதவரி அறவீடு செய்யப்பட்டிருக்காமையால் சபையின் வருமானக்குறைவு ஏற்பட்டுள்ளது | சட்டத்தின்பால் விதிக்கப்பட்டுள்ள கட்டணம் அறவிடப்படுகின்றது. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,205,717 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 2,080,313 தொகையான முத்திரைக்கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | கோரிக்கை கடிதங்கள் இறைவரித் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதும் அவற்றிற்கான கட்டணங்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. | உரிய காலப்பகுதியில் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள், பொது வழிகள், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உபவிதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம் 33 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் எதுவித உபவிதிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றது | சட்டத்தின் பிரகாரம் உபவிதிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் |

(ஆ) நோக்கங்களிலிருந்து விலகிய செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மயான வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மயான வேலைத்திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காது மீளாய்வாண்டின் இறுதியில் வீதிவிளக்கு கொள்வனவுக்கு ரூபா411,250 பயன்படுத்தப்பட்டிருப்பது திட்டமிடப்பட்ட நோக்கத்திலிருந்து விலகிய செயற்பாடாக அவதானிக்கப்பட்டுள்ளது. | குறித்த திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளை கருத்திற்கொண்டு பாதிடப்பட்ட வேலைக்கு மாற்று அத்தியாவசிய வேலைத்திட்டங்களை சபை முன்மொழிந்தது. | பாதீட்டின்படி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும் |

(இ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட ரூபா 1,111,000 பெறுமதியான 03 வேலைத்திட்டங்கள் எதிர்பார்க்கப்பட்ட விளைவினைப் பெற்றுக்கொள்ளாது செயற்பாடுகள் முற்றாக கைவிடப்பட்டிருந்தன. | நடப்பாண்டில் நடைமுறைப்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளை கருத்திற்கொண்டு பாதிடப்பட்ட வேலைக்கு மாற்று அத்தியாவசிய வேலைத்திட்டங்களை சபை முன்மொழிந்தது | பாதீட்டின்படி வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு உரிய விளைவுகள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும் |

**(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) சபையின் எல்லைக்குட்பட்ட கழிவுகளை வீடுகள், கடைகள், கோட்டல்கள், மரக்கறி மற்றும் பழவிற்பனை நிலையங்கள், இறைச்சிக்கடைகள், தொழிற்சாலைகள், வைத்தியசாலைகள், பொது இடங்கள் ஆகியவற்றில் இருந்து பெறப்படுகின்ற கழிவுகள் இடத்தின் தன்மைக்கேற்றவாறு திண்மக்கழிவு வகைப்படுத்தல் முறைமை பின்பற்றப் பட்டிருக்கவில்லை. | பாதுகாப்பாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | திண்மக்கழிவு முகாமைத்துவ முறைமை உரிய முறையில் பின்பற்றப்படல் வேண்டும் |
| (ii) சபையினால் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் எவையும் வழங்கப்பட்டிருக்காததுடன் 02 சுகாதார தொழிலாளர்களுக்கு வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலத்தில் கவனத்தில் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் | கழிவு முகாமைத்துவ பயிற்சிகள் வழங்குவதுடன் மருத்துவ பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும் |

**(உ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (i) கழிவுகளை பிரிக்கக்கூடிய வெவ்வேறு பொதிமுறைமை நடைமுறைப்படுத்தப்படாது சேகரிக்கப்படும் கழிவுகள் எரியூட்டப்படுவதனால் சூழல் பாதிப்படைகின்றது. | சூழலுக்கு தீங்கு ஏற்படாதவாறு அகற்றப்படுகின்றன | சூழல் பாதிப்படையாமல் சேகரிக்கப்படும் கழிவுகள் அழிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நாச்சிக்குடா,வாடியடி நாளாந்தம் விற்பனை செய்யப்படுகின்ற இறைச்சிகளின் கழிவுகள் மற்றும் எலும்புகள் அதன் பின்பகுதியிலுள்ள நீர் நிலையில் வீசப்படுவதனால் துர்நாற்றம் வீசுவதுடன் சுற்றுப்புற நீர் நிலைகள் பாதிப்படைந்து காணப்படுகின்றது. | சுகாதாரமான முறையில் கழிவுகள் அகற்றப்படுகின்றது. | சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக நீண்டகால அடிப்படையில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு நடைபெறுகின்றன. | நீண்டகாலத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும் |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| 2019 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினரின் எண்ணிக்கை 72 ஆகவும் உள்ளவாறான ஆளணியினர் எண்ணிக்கை 44 ஆகவும் இருந்ததுடன் 28 ஆளணியினருக்குரிய வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்பட்டிருக்கவில்லை. | நேர்முகத்தேர்வு நடைபெற்றுள்ளது. பதவிகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை 335 கட்டட அனுமதிக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டிருந்தும் 17 கட்டட | கட்டட விண்ணப்பங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | பிரதேச சபை சட்டத்திற்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

அனுமதிகளே வழங்கப்பட்டிருந்தன. அங்கீகாரமற்ற 318 எண்ணிக்கையான கட்டடங்கள் அமைக்கப்பட்டமை தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் பயன்பாட்டில் உள்ள 12எண்ணிக்கையான வாகனங்கள் 2009 ஆம் ஆண்டிலிருந்து நாளதுவரை சபையின் பெயரிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காது தொடர்ந்தும் வழங்குனர்களின் பெயர்களிலேயே காணப்படுகின்றது. | சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிமை மாற்றம் உரிய காலத்தில் செய்யப்படல் வேண்டும் |

### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 04 எண்ணிக்கையான வாகனங்களுக்கு வாகன வருமான உத்தரவுப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன எடுக்கப்பட்டிருக்காததுடன் 03 எண்ணிக்கையான வாகனங்களின் வருமான உத்தரவுப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம் என்பன காலாவதியாகியிருப்பதுடன் அவற்றை புதுப்பிப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | உரிய காலத்தில் வாகன வருமான உத்தரவுப்பத்திரம், காப்புறுதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

### 3.4.3 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 06 எண்ணிக்கையான வாகனங்கள் 1 தொடக்கம் 05 வருடங்களுக்கு மேலாக பயன்பாடின்றி காணப்படுவதுடன் பயன்படுத்தக்கூடியவாறு திருத்தங்கள் மேற்கொள்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை | நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 04 நீர்த்தாங்கி வாகனம் மற்றும் 02 இணைப்புக்கள் (Trailor) 05 வருடங்களுக்கு மேலாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமல் பயன்பாடின்றியும் துருப்பிடித்த நிலையிலும் பராமரிப்பின்றி காணப்படுகின்றது. | பதிவிற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.4.4 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டிலிருந்து பூநகரி உப அலுவலகத்தின் கீழான வாடியடி சந்தைக் கடைத்தொகுதியில் 11 கடைகள் 06 வருடங்களிற்கு மேலாக பயன்பாடின்றி காணப்படுகின்றது. | கடைகளை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடைகளை உரியகாலத்தில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |